# ஈழத்துப் படைப்புலகில் எஸ்.பொ எனும் பேராளுமை



**முனைவர் சு.செல்வகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை – 600005.
மின்னஞ்சல் :mugadu.kumaran@gmail.com

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு தனித்த அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டவர் எஸ்.பொ என அழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை. இவர் 1932 ஜீன் 2ஆம் நாள் இலங்கையில் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். 2014 நவம்பர் 26இல் மறைந்தார். சிறுகதை, புதினம், நாடகம், கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு, அரசியல் எனப் பன்முகப் பரிமாணங்களில் எழுதியவர். ஈழப்போர் உக்கிரமடையவே 1989 முதல் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் வசித்து வந்தார். பின்னர்த் தமிழகம் சென்னையில் குடியேறியவர். அங்கு 'மித்ரா' என்ற பதிப்பகத்தை நிறுவி ஈழத்து இலக்கியங்கள் பலவற்றை வெளிக்கொணர்ந்தவர். தீ, சடங்கு உள்ளிட்ட பல புதினங்கள் மற்றும் வி, ஆண்மை உள்ளிட்ட பல சிறுகதை நூல்களாலும் தொடக்க நாட்களில் தமிழ் இலக்கிய உலகினரால் அறியப்பட்டவர். தொடர்ந்து அப்பையா, எஸ்.பொ. கதைகள், கீதை நிழலில் அப்பாவும் மகனும், வலை + முள், பூ, தேடல், முறுவல், இஸ்லாமும் தமிழும், பெருங்காப்பியம் பத்து, நனவிடைத் தோய்தல், நீலவாணன் நினைவுகள், இனி ஒரு விதி செய்வோம், வரலாற்றில் வாழ்தல், (சுயமரியாதை) ஈடு (நாடகம்) மாயினி, மணிமகுடம், தீதும் நன்றும், காந்தீயக் கதைகள், காந்தி தரிசனம், மகாவம்சம், (மொழிபெயர்ப்பு) உள்ளிட்ட இன்னும் பல நூல்களை வெளிக்கொணர்ந்தவர். மேலும் கன்னட நாட்டில் வழங்கப்படும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருதினையும் 2010 இல் பெற்றவர்.

குறிப்பாக, "வரலாற்றில் வாழ்தல்" நூலின் மூலம் தமது அனுபவப் பகிர்வினை ஏறத்தாழ இரண்டாயிரம் பக்க அளவில் நான்கு பகுதிகள் அடங்கிய இரண்டு மிகப்பெரிய தொகுதியினை வெளிக்கொணர்ந்ததின் மூலமாகத் தமிழ் எழுத்துலகில் பேரதிர்வை ஏற்படுத்தியவர். மேலும், ஈழத்தமிழர்களின் "பனிக்குள் நெருப்பு" எனும் நூலின் மூலம் புலம்பெயர் வாழ்வினையும் பதிவு செய்தவர். முற்போக்கு இலக்கியம்

மீது ஒரு தரப்பினர் விமர்சனம் வைத்த போது முற்போக்கு இலக்கியம் எனும் பார்வை முறையினை முன்வைத்தவர். இவ்வாறாகப் படைப்பிலக்கியம் மட்டுமின்றி இலக்கியம், அரசியல், சாதிய, சமூக விமர்சனங்களை எவ்விதத் தயக்கமும் இன்றி நேர்மையாகவும் துணிச்சலோடும் பதிவு செய்ததின் மூலமாக வரலாற்றில் தம்மை உலகத் தமிழர்களிடையே தனித்துவமாக அடையாளப்படுத்திக் கொண்டவர் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

எஸ்.பொ வின் எழுத்துகளை வாசிக்கின்ற நேரங்களில் அவரை எந்த வகைமைக்குள் பொருத்திப் பார்ப்பது என்பது நமக்குப் பெருத்த கேள்வியாகவே உள்ளது. ஒரு மாமனிதர் எனச் சுட்டுவது, அல்லது எஸ்.பொ தமது அப்பய்யாவைச் சுட்டுவதைப் போல நாமும் எஸ்.பொ வை ஒரு காட்டு மனிதன் என்று குறிப்பிடுவதா? சமூகப் பேராளி என்பதா? இலக்கியம், சமூகம், அரசியலை, மிக நுட்பமாக விமர்சிக்கின்றவர் என்ற நிலையில் விமர்சகர் என்பதா? படைப்பாளி என்பதா? கலைஞன் என்பதா? நற்போக்குவாதி என்று குறிப்பிடுவதா அல்லது இவை அனைத்தையும் தன்னகத்தே கொண்ட ஒரு பேராளுமையாக இனங்காண்பதா என்கிற போது எஸ்.பொ அவர்களை ஒரு பேராளுமையாகவே இனங்காண முடிகின்றது.

எஸ்.பொ அவர்கள் வரலாற்றில் வாழ்தல் நூலிலே தம் அனுபவங்களைப் பகிர்கின்ற போது அவரோடு தொடர்புடைய அல்லது அவர் மதிக்கின்ற சக மனிதர்களான ஜீவா, டானியல், டொமினிக் ஒவ்வொருவருமே ஒருவித ஆளுமைகள் என்பதும் நாம் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

எஸ்.பொ “ஓர் எளிய மனிதர்” எஸ்.பொ வின் வாழ்வில் சிக்கல்களும் நெருக்கடிகளும் ஏமாற்றங்களும் பல நேரங்களிலும் மிக எளிதாகத் தொற்றிக் கொள்கிறது. இதற்குப் பல எடுத்துக்காட்டுகளை நாம் சொல்ல முடியும். அவர் இலங்கையிலிருந்து சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் வந்து தமது கல்வியைத் தொடர்ந்து சில மாதங்களுக்குப் பிறகு அந்நியநாடு சார்ந்த சில விதிமுறைகள் காரணமாக அங்குத் தொடர்ந்து அவரால் கல்வி கற்க முடியாத நிலை உருவாகிறது. பின்னர்க் குறிப்பிட்ட இடைவெளிக்குப் பின்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து இன்டர்மீடியட் படிக்கின்றார். இங்குத் திராவிட இயக்க மாணவப்

பொறுப்பாளர்களின் செயல்பாட்டின் மீது திருப்தியின்மையினால் அவர்களுக்கு எதிராகக் கேள்வி கேட்கிறார். நண்பர் விஸ்வநாததாஸோடு சேர்ந்து ஒரு பிரசுரத்தை வெளியிடுகிறார். அது தம்மால் வெளியானது யாருக்குமே தெரியாது எனக் கருதிக் கொண்டிருக்க, இலங்கையின் மொழிப் பயன்பாட்டினை வைத்து வெளியீட்டிற்குக் காரணமானவர் எஸ். பொ தான் எனக் கண்டறியப்படுகிறார். இதனால் அவரைப் பல்கலைக்கழகத்தில் இருந்து முற்றிலுமாய் நீக்கும் நிலை ஏற்படுகிறது. ஆனால் பேராசிரியர் ஜேசுதாசன் அவர்களின் ஒத்துழைப்பினால் படிப்பைத் தொடர்வதற்கு எந்தத் தடையும் வரவில்லை. ஆனால் உடனடியாக விடுதியில் இருந்து வெளியேற்றப்படுகிறார்.

“வரலாற்றில் வாழ்தல்” எனும் நூலில் சுயசரிதம் சார்ந்த ஒரு எழுத்து முறையினை நூற்றுக்கு மேற்பட்ட தலைப்புகளில் நம்மோடு பகிரும் எஸ். பொ, நூலின் முதல் தலைப்பாக “அறத்தையே” முன்வைக்கின்றார். இத்தொடக்கம் அவரை அறத்தின் மீது நம்பிக்கை கொண்டவராகக் காணச் செய்வதோடு அவரது எழுத்தும் விமர்சனமும் அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்று நம்பச் செய்கிறது. அவர் இந்த வரலாற்றை எழுதுவதற்கான காரணங்களைக் கூறுகையில் சமூகத்தில் “வல்லான் வகுத்ததே வாய்க்கால்” என்பதாக நிகழ்த்தப்படும் அற விரோதச் செயல்களே, அவரை இதனை எழுதத் தூண்டியிருப்பதை உணர்த்துகிறார். அவரது சமூக நேர்மையும், அவை சார்ந்த செயல்பாடும் அவற்றில் அவருக்கிருந்த நம்பிக்கையும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. ஓரிடத்தில் சத்தியத்துக்கு அழகுண்டு. அதற்கு உயிருண்டு. காலத்தால் தேயாத அழகு. காலத்தால் மூப்படையாத உயிர்ப்பு, அமரத்துவ அழகின் உயிர்ப்பு அதுவே உண்மை என்பதாகச் சத்தியத்தின் உயிர்ப்பைப் பறைசாற்றுகின்றார். மட்டுமின்றி ஏசுகிறிஸ்து, புத்தர், கண்ணன், அல்லா போன்றோரின் வாழ்வில் தோன்றியது போன்ற வியப்புகள் தம் வாழ்வில் நிகழவில்லையாயினும் அவர்களுக்கு ஏற்படாத அனுபவங்கள் சில தனக்கு வாய்த்துள்ளன. இவை, என் ஊழியத்தில் நான் ஊன்றிய பரமார்த்த விசுவாசத்தினாலும், இலக்கியத்திலே நான் குவித்திருந்த தவத்தாலும் வாய்த்தனவாக நான் சம்பாவனை செய்கின்றேன் என்று குறிப்பிடுகிறார். இதனைக் கவனத்தில் கொள்கிற போது இந்தச் சமூகத்திற்குத் தன்னிடமும் சொல்வதற்கு ஏதோ ஒன்றோ?

பலவோ? இருக்கிறது என்ற அவரின் நம்பிக்கையினை நாம் அறிதல் வாய்ப்பாகிறது. இங்கு எஸ்.பொ குறித்த ஜெயமோகனின் கருத்து பதிவுக்குரியது.

“கோட்பாட்டாளர்களின் பொதுமைப்பாடுகளை தன் படைப்பனுபவம் மூலமே நிராகரித்தவர். மனிதனைத் தொகுத்து வரையறை செய்து காட்ட ஓயாது முயன்று மார்க்ஸியத்துக்கு எதிராகத்தான் அறிந்த யாழ்ப்பாண மனிதனைப் பகுத்துக்காட்டிக் கொண்டிருந்தவர். அவன் காமமும் குரோதமும் நிறைந்தவன். ஆசைகளினால் அலைப்புறுபவன். உறவுகளில் சிக்கித் தடுமாறுபவன். வாழ்தலுக்கும் இருத்தலுக்கும் இடையேயான கலக்கமாக வாழ்க்கையை அறிபவன். மீண்டும் மீண்டும் எஸ். பொன்னுத்துரை, இம்மனிதனைச் சித்தரித்து, அவனை மார்க்ஸியம் காட்டிய வரலாற்று வாதத்துக்கு எதிராக முன்வைத்தார். மனிதனின் வற்றாத வாழ்வாசையையும் அதன் பொருட்டு அவன் கொள்ளும் போராட்டத்தையும் அதன் விளைவாக அவன் உருவாக்கிக் கொண்டுள்ள நெறிகளையும் அவனது சாரமாகக் கண்டார். மார்க்ஸியர்கள் சொன்ன முற்போக்கு வாதத்துக்கு எதிராக எஸ். பொன்னுத்துரை முன்வைத்த நற்போக்கு வாதம் இதுவேயாகும்” (www.jeyamohan.in).

மனிதர்கள் கொள்கைகளை, கோட்பாடுகளை, அரசியலைத் தேர்வு செய்வதற்கு அவரவர் அளவில் பல காரணங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் சிலரின் காரணங்கள் நமக்கு வியப்பைத் தருவனவாகவும் அமைகின்றன. எஸ்.பொ, தான் நாஸ்தீகனாக மாறியது குறித்துக் கூறுகின்ற போது, “ஜாதி வேளாளர்கள் கடைபிடித்த அடக்குமுறை எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அனுபவித்த உரிமைகள் கூட என் சாதியருக்கு மறுக்கப்பட்டவை எரிச்சலைத் தந்தது. என் அம்மாவைப் போன்ற பரமபக்தைக்குக் கோயிலுக்குள் சென்று சாமி கும்பிட உரிமை இல்லை ஏன்?” (வ.வா, ப-15). என்பதும், “மேல் சாதியினருக்கு மட்டுமே சகல உரிமைகளையும் அளித்துள்ள கடவுளை - அன்றேல் கடவுளர்களை - கீழ்ச் சாதியினர் முண்டியடித்துக் கும்பிட்டுச் சேவித்து வழிபடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அன்பு - மரியாதை ஆகிய பண்புகள் ஒற்றைவழிப் பாதையில் வளர்க்கப்படுவன அல்ல. என்னை மதிக்காதவனை நான் மதிக்கமாட்டேன். என்னை நிராகரித்துக் கீழ்ச் சாதியினர் ஆக்கிய கடவுளை நானும் நிராகரித்து விடவேண்டும் அதுவே நியாயம் என்று நினைத்துக் கொண்டேன். மனிதக் கௌரவங்கள் பற்றிய தேடலிலே என்னை

அறியாமலே நான் ஈடுபடத் துவங்கியதின் அடையாளந்தான் அன்றைய என் நாஸ்திக நிலைப்பாடு" (வ.வா, ப-15) என்று குறிப்பிடுகின்றார். சாதி குறித்த இவரின் ஒவ்வொரு பதிவுமே இருள் படிந்த வரலாறாகவே அமைகின்றன.

எஸ்.பொ அவர்கள், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பு பயின்ற போது கிறித்தவராக மதம் மாறியவர். இம் மதமாற்றம் பின்னர் அவருக்கு ஊர் காவல்துறை புனித அந்தோணியார் கல்லூரியில் ஆசிரியர் வேலை கிடைக்கவும் ஒரு காரணமாக இருக்கிறது. ஆனால் அது வெகுநாட்கள் நீடிக்கவில்லை. கார்த்திகேயன் மாஸ்டரிடம் கடிதம் வாங்கிச் சென்றிருந்ததால் அவர் சாதியில் வேளாளராக இருப்பார் என்ற யூகத்தில் பணி அமர்த்தி விடுகின்றனர். ஆனால் எஸ்.பொ ஒரு நளவர் சாதியினர் என்பதை அறிந்து நிர்வாகமே அடியாட்களை அனுப்பி அவரை அடிக்க முற்படுகின்றது. நண்பர்களைக் கொண்டு சிக்கலை எஸ்.பொ எதிர் கொண்டாலும், இறுதியாக அக்கல்லூரியில் இருந்து உடனடியாகத் தம்மை விலக்கிக் கொள்கின்றார். இத்தகைய இறுக்கமான ஒரு சாதிய நிலை வேளாளர்களின் தலைமையில் ஈழத்தில் செயல்பட்டதைப் பதிவு செய்கிறார். ஈழத்தில் கிறித்தவம் வேளாளர் கட்டுப்பாட்டில் இருந்ததைக் குறிப்பிடும் எஸ்.பொ, "கிறிஸ்தவம் கூட யாழ்ப்பாண மண்ணிலே வேளாளர்களுக்கே சொந்தமானதாக இருந்தது. யாழ்ப்பாணத்து யேசுநாதர் உண்மையாகச் சொல்லுகிறேன். இன்றும் வேளாளனாகவே வாழ்கின்றார்" (வ.வா, ப-452) என்பதும் இன்னும் சாதிய ஒடுக்குமுறை தொடர்பாக அவர் குறிப்பிடும் பல நிகழ்வுகளும் வரலாற்றின் பல முகங்களை உணர்த்துவதாக உள்ளது. பாலியல், உடலுறவு, காமம் பற்றிய அவரது மன ஓட்டமும் அதன் வெளிப்பாடும் கூட யதார்த்தம் நிறைந்ததாகவே விளங்குகின்றது. சிலரது சந்திப்புகள், சில நேரங்களில் சில மனிதர்களை மிகப்பெரிய மாற்றத்திற்குக் கொண்டுச் சென்றதை வரலாறு நமக்கு உணர்த்தியிருக்கிறது. சாருநிவேதிதா உடனான சந்திப்பு பாரதிக்குள் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்ததைப் பாரதி பதிவு செய்திருக்கிறார். கவியரசு கண்ணதாசன் அவர்கள் "சந்தித்தேன் சிந்தித்தேன்" எனும் தனது புத்தகத்தில் ஏராளமான மானுடச் சந்திப்புகளைப் பதிவு செய்திருப்பதைக் காணலாம். அவ்வாறே எஸ்.பொ வுக்கு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த ஜீவாவின் சந்திப்பு அவருக்குள் பெரிய மாற்றத்தை, கற்றலைக் கொண்டு வந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். எஸ்.பொ வின் "அவள் அழகி ஆனால்" என்னும் சிறுகதையினை

முன்னிறுத்தி ஜீவா எழுப்பிய கேள்விகள் இலக்கியம், மக்கள் சார்ந்ததாக, மக்களின் விடுதலை சார்ந்ததாக, மக்களின் சிக்கல்களை வெளிச்சப்படுத்தி அதற்கான தீர்வை கோருவனவையாக அமைய வேண்டும் என்பதாக இருந்திருப்பதை எஸ்.பொ.வின் பதிவு வெளிப்படுத்துகிறது.

இலக்கியம் குறித்த ஒரு வரையறையை முன்வைக்கும் எஸ்.பொ இலக்கியத்திலே படைத்தல் மட்டுமல்ல பகிர்தலும் தேவை. இது இவ்வாறு சேமமுறாவிடின், இலக்கியம் சமூகப் பிரக்ஞையை வளர்க்க வகை செய்யாது என விளக்குகிறார். மேலும் இலக்கியம் குறித்து ஓரிடத்தில் கேள்வி எழுப்புகிற போது இலக்கியம் சொந்த வாழ்க்கையின் மனச்சலனங்களை பிரதிபலிக்கக் கூடாதா? சொந்தத் தேடல்களின் அவசரங்களையும் அவலங்களையும் பிரதிபலிக்கக் கூடாதா? என அகத்தின் மனக்கோலங்களுக்கு வடிவம் கொடுப்பது எழுத்தாகாதா? எனக்கு அந்நியமான மனோரதியக் கற்பனைகள் மட்டும் தான் படைப்புகளாகப் பிரசித்தப்படுத்தல் வேண்டுமா? என்பதாக இலக்கியம் தோற்றம் கொள்கிற பன்முக வாயிலை அடையாளப்படுத்துகிறார்.

மேலும், எஸ்.பொ, பூபால சிங்கத்துடனான உரையாடல் ஒன்றில் தமது "தீ" நாவலைப் பற்றி கூறுகின்றபோது "தீயைத் தீயிலிடுங்கள்" என்று கற்பைக் காப்பதாக நினைத்து யாழ்பாணத்தில் நாவேந்தன் உள்ளிட்ட பல எழுத்தாளர்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதும், ஒரே நாளில் ஒரு தமிழ் நாவலின் தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட பிரதிகளைத் தீயைத் தவிர நான் விற்றதில்லை என்ற பூபால சிங்கத்தின் வாக்குமூலமும், பெண் குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுதல் என்பது வேறு, யாழ்ப்பாணத்தின் பால் உணர்ச்சிச் சிக்கல்களைச் சித்தரிப்பது என்பது வேறு. இதை அறியாமல் எங்கட எழுத்தாளர்கள் ஓடித் திரியிறாங்கள் என்பதின் மூலம் தன் எழுத்துப் பணிக்குப் பகிரங்க ஆதரவு தந்தவர் பூபால சிங்கம் என்று குறிப்பிடுகின்றார்.

எஸ்.பொ. வின் விமர்சனங்களை நோக்குகின்ற போது அவர் ஆகச் சிறந்த ஒரு விமர்சனக் கலைஞன் என்பது விளங்கவரும். ஈழத்தமிழர்கள் குறித்து அவர்களின் மொழி குறித்து, மொழி உணர்வு குறித்துத் தமிழக இலக்கிய ஆளுமைகள் சரியாகப் புரிந்து கொள்ள தவறுவது குறித்தும் வருந்தும் அவர், "அடுத்த மாபெரும் திராவிடத் தமிழ் தலைவரை இனங்காணத் திரையரங்குகளிலே தவங்கிடக்கும் தமிழ்நாட்டு வாக்காளர் ஈழத்தமிழருடைய தமிழ் உணர்வுகள் பற்றிச் சிந்தையிற் கொள்ளாது"

(வ.வா, ப-161). என்பதாகப் பதிவு செய்வதோடு, தமிழர்கள் தன் தலைவர்களைத் திரையரங்குகளில் தேடிக் கொள்வது பற்றியதான ஒரு குற்றச்சாட்டையும் அழுத்தமாக முன்வைக்கின்றார்.

ஒரு இடத்தில் ஜீவானந்தம் பற்றி குறிப்பிடுகையில், தமிழில் எழுந்த தொன்மையான கலை இலக்கியப் படைப்புகளின் கூறுகளைப் பாட்டாளி மக்களின் எழுச்சிக்குப் பயன்படுத்தலாம் என்பதைச் சாத்தியமாக்கி வாழ்ந்தவர் என்கிறார். மேலும் கவிஞர், பகுத்தறிவுவாதி, மனிதநேயன், தமிழ் அடையாளத்தைத் துறக்காத மார்க்சியவாதி என்பதாகவும் அடையாளப்படுத்துகின்றார். அத்தோடு இவை அனைத்தும் ஒருங்கிணைந்த ஜீவாவின் ஈழத்து வருகை ஈழத்தமிழ் இலக்கியத்தில் பெரியதொரு தரிசன மாற்றத்தை ஏற்படுத்தியது என்கிறார். ஆனால் அதனை ஈழத்துத் தமிழ் இலக்கிய மார்க்சிய விமர்சகர்கள் முறையாகப் பிரஸ்தாபிக்கவில்லை என விமர்சிக்கின்றார்.

ஒரு தேர்ந்த படைப்பாளியாக, விமர்சகராக விளங்கும் எஸ்.பொ, கவிச்சக்கரவர்த்தி கம்பனைப் பற்றி பேசுகிற போது,

"தேறினன், அமரர் கெல்லாம்
தேவராம் தேவர் தாமே
மாறிஇப் பிறப்பில் வந்தார்
மானுடராக மன்னோ
ஆறுகொள் சடிலத்தானும்
அயனும் என்றிவர்களாதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்றதம்மா"

எனும் பாடலைக் குறிப்பிட்டு அதனை மார்க்சிம் கார்க்கியின் "மனிதன் எத்துனை மகா மந்திரச் சொல்" என்பதோடு ஒப்பிட்டு நோக்குவதும் எஸ்.பொ எனும் பேராளுமையின் அறிவின் விசாலத்தை முத்திரை செய்வதாய் உள்ளது. இலக்கியத்தில் ஆழங்கால்பட்ட எஸ்.பொ அவர்கள், சில இடங்களில் திரைப்படம் உள்ளிட்ட இன்னபிற கலைகள் குறித்துப் பதிவு செய்வதும் முக்கியமானதாகிறது. இவரின் இத்தகைய பரந்துபட்ட ஞானமே அவரை நாம் ஒரு பேராளுமையாக இனங்காணவும் செய்கிறது. ஓரிடத்தில் கலைகளுக்கும் மக்களுக்குமான தொடர்பினைப் பதிவு செய்யும் அவர், சில கலைகள் சாதி ரீதியாக

முடக்கப்பட்டிருப்பதையும் அதனைத் திராவிட இயக்கங்கள் சரிவர மீட்டெடுக்க முயற்சிக்கவில்லை என்ற விமர்சனத்தையும் முன்வைக்கின்றார்.

“காவடியைக் கலையாக்கிய பெருமை குறவருக்கும் புல்லருக்கும் உண்டு. தோல் கருவியைப் பேசவைத்தவன் (பறையை வைத்தவன்) பறையன். இந்த அற்புதத் தமிழ்க் கலைஞர்கள் அனைவரும் தலித் முத்திரையுடன் சிறுமை படுத்தப்பட்டதற்கான முகாந்திரம் என்ன? சமய ஆசாரம் என்ற பெயரில் புகுத்தப்பட்ட ஜாதிய மேலாதிக்க உணர்வுகள் தமிழுக்கு அந்நியமானது. அவற்றைக் களைந்தெறிந்து தமிழ்த்துவத்தின் மேம்பாட்டினைச் சுதந்திரம் பெறச் செய்வதிலேயே திராவிட இயக்கங்கள் தவறின, தோற்றன. இந்தத் தோல்விதான் தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் சீர்கேடுகளுக்கும் தோற்றுவாயாக அமைகின்றது என்று நான் நினைக்கிறேன்” (வ.வா. ப-794) என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகின்றது.

பிரம்மச்சாரியம் பற்றி பேசுகிற போது காந்திஜி குறித்த ஒரு மதிப்பீட்டை எஸ்.பொ முன் வைக்கின்றார். காந்திஜி பிரம்மச்சாரியத்தை ஒரு தவநிலையாகக் கடை பிடித்திருக்கிறார் என்பதை எஸ்.பொ அவர்கள் உணர்கிறார். காந்திஜி கடைபிடித்த பிரம்மச்சாரியமானது புலனுணர்ச்சிக்கான அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் என்பதாகவே அவர் விளங்கிக் கொண்டிருந்தார் என்பதாகப் பதிவு செய்கிறார். காந்திஜியின் கொள்கைகள் என்னை ஈர்க்கவில்லை என்று குறிப்பிடும் எஸ்.பொ, ஆனால் காந்திஜி உண்மையின் அற்புத உபாசகனாய் வாழ்ந்தார் என்பது மகா ஆதர்ஷம் என்பதோடு, மகாத்மா என்கிற முகமூடி அணிந்து கொண்டு அவர் உண்மைகளிலிருந்து விலகி ஓடியவர் அல்லர் என்பதும், இத்தகைய ஒரு புனிதர் உலகத்தில் மனித வடிவில் நடமாடினரா என்கிற பிரமிப்பும் இன்று அவரை மீள்வாசிப்பு செய்கிற போது ஏற்படுகிறது என்றும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் எஸ்.பொ உண்மையை நேசிக்கிறவர் என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது.

காந்தியின் வார்த்தைகளைச் சீர்தூக்கி நெகிழும் எஸ்.பொ, “அவருடைய அறுபத்து ஒன்பதாவது வயதில் 1938ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதி ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டும் என்கிற ஒரு துர்க்கனவைத் தொடர்ந்து தனக்கு ஸ்கலிதம் ஏற்பட்டதைக் குறிப்பிடுகின்றார். உலகில் எந்த ஒரு தலைவரும் நெஞ்சை நிமிர்த்தி இத்தகைய உண்மைகளைக் கூறியதில்லை. இந்தத் தனிப்பட்ட

நிகழ்ச்சியைக் கூடத் தன் பொது வாழ்வின் ஒழுக்க உடைவாக அவர் கருதி வருந்தினார்" (வ.வா, ப-1164) என்று பதிவு செய்கின்றார்.

தற்கால இலங்கை அரசியலில் இரத்தக் கறை படிந்த அநேகப் பக்கங்களை எழுதுவதற்குக் காரணமானவராக ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைச் சுட்டுகின்றார். 1983இல் நிகழ்த்தப்பட்ட கலவரம், இந்திய அரசின் பூமாலை நடவடிக்கைகள், இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் வண்ணம் டெல்லிக்கு அழைத்து வரப்பட்டு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்ட போது சில ஷரத்துக்களை மறுத்த பிரபாகரன், அவர்களை அன்றைய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தீக்ஷித் மிரட்டிப் பணிய வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த தகவல்கள் உட்பட இந்தியாவின் ஆதரவு மற்றும் பொடியாள்தன்மை போன்ற பல அம்சங்களை விவாதிக்கிறார்.

சிங்களவர்களைப் பொறுத்தமட்டில் தமிழர்களை அழித்தொழிப்பதில் தீவிரம் காட்டிய பல நிகழ்வுகள் எஸ்.பொ வால் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் போக்கிலே அவர் சிங்கள அரசியல் தலைவர்கள் பற்றி குறிப்பிடும் இன்னொரு விஷயமும் மிகவும் முக்கியமான விமர்சனமாகி அமைகிறது.

"நான் அறிந்த வரையில் எந்தச் சிங்களத் தேசியத் தலைவனும் கடின உழைப்பின் மூலம் தேச நிர்மாணத்திற்கு வருமாறு சிங்கள மக்களை அழைத்தது கிடையவே கிடையாது. தமிழனைக் கடித்துக் குதறுதல் மட்டுமே தேசியமென்று உணர்த்தப்பட்டது. இதன் மிகக் கோர விளைவு தான் 1983ஆம் ஆண்டு ஜீலை மாதம் இலங்கையில் நடந்த இனச்சங்காரமும் துயரும்" (வ.வா, ப-859).

இது மட்டுமின்றித் தமிழீழ வரலாற்றில் இஸ்லாமியர்களின் அழித்தொழிப்பு பற்றியும், ஈழத்து எழுத்தாளர்கள் பலரும் விமர்சிக்கக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்கான ஒரு தெளிவினையும் காரணக் காரியத்தோடு எஸ்.பொ இங்கு விளக்குகிறார். குறிப்பாகக் கிழக்கு இலங்கையில் தமிழ் ஒழிப்புக்குத் துணை போன முஸ்லீம்கள் செய்த நியாயமற்ற தமிழ்ச் சங்காரத்தினாலேயே யாழ்ப்பாணத்திலிருந்து பெருமளவு யாழ்ப்பாண முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று தமிழ் அமைப்புசார் செயல்களுக்கு நியாயம் கற்பிக்கும் எஸ்.பொ, ஆனாலும் சிலர் செய்த தவறுக்கு முழு இனமும் தண்டிக்கப்படுவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்பதையும் பதிவு செய்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக தம் கருத்தினை முன்வைக்கும் அவர், இந்நிகழ்வுக்காகப் பிரபாகரன் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் மன்னிப்புக் கேட்டதையும் பதிவு செய்கிறார். அத்துடன் முஸ்லீம்களுக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை சுட்டியே ஈழத்திலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் தம்மை ஒரு மனிதாபிமானம் அல்லது ஜனநாயகவாதியாகச் சிலாகித்துக் கொள்ளும் எழுத்தாளர்களையும் அவர் விமர்சிக்கத் தவறவில்லை. இவைகள் மட்டுமின்றி இஸ்லாமியர்கள் எதற்கெடுத்தாலும் அரபு நாட்டோடு தம்மைத் தொடர்புபடுத்தி புனிதப்படுத்திக் கொள்வதையும் இங்கிருந்து மதம் மாற்றப்பட்ட முஸ்லீம்களும் இதில் அடங்குவார்களோ என்பதாகக் கேள்வி எழுப்புவதும், ஈழ வரலாற்றின் முக்கியமான பதிவாகின்றன. இவை பலரும் சொல்லத் தயங்குகிற ஒன்று. அதை மீறிய எஸ். பொ வின் எழுத்தும் செயல்பாடு கூட அவரை பேராளுமை மிகு மனிதனாக்குகின்றது என்பதும் எண்ணிப்பார்க்கத் தக்கன.

"வரலாற்றில் வாழ்தல்" என்ற நூலில் எண்ணற்ற மதிப்பீடுகளை முகத்திற்கு முகமாக அசாத்தியமான துணிச்சலோடும் நேர்மையோடும் முன்வைப்பதை நாம் பார்க்க முடிகிறது. பெரிதாக எதனையும் எளிதாக நிராகரிக்க முடியாத நடுநிலையுடையதாகவே எஸ்.பொ வின் சிந்தனையும் அணுகுமுறையும் விமர்சனமும் அமைந்திருப்பதைக் காணலாம். குறிப்பாக இலக்கியம், கலை பற்றியும் நிரம்ப அவர் பகிர்ந்து கொண்டிருந்தாலும் அவர் தமது நற்போக்கு இலக்கிய நூலில் இலக்கியம், கோட்பாடு போன்ற விஷயங்கள் குறித்துக் குறிப்பிட்டிருப்பதும் பிரதானமானவைகளாகவே எனக்குப் படுகிறது. குறிப்பாக, "இலக்கியக் கோட்பாட்டினை விஞ்ஞான உண்மையென்று பிடிவாதம் செய்யும் சில எழுத்தாளர்கள் நம் மத்தியில் வாழ்கின்றார்கள். இவர்கள் கோஷ்டி சேர்ப்பதையே முழு நேரப் பணியாக வரித்துள்ளார்கள்" (நற்போக்கு இலக்கியம், ப-13) என்கிறார்.

இன்னொரு இடத்தில் தமிழ் இலக்கிய மரபை அறியாதவர்கள் அல்லது அறிந்தும் அதனைச் சொல்லித்தர இயலாதவர்களே மேற்கு நாடுகளிலிருந்து சில பதங்களையும் கருத்துகளையும் இறக்குமதி செய்து வித்தாரம் செப்ப முயன்று இடர்ப்படுகிறார்கள் என்கிறார்.

"எஸ். பொன்னுத்துரையை இயல்புவாதம் மூலம் முற்போக்கு முகாமின் கோட்பாட்டு மேலாதிக்கத்தை எதிர்கொண்ட படைப்பாளி என்று வகுத்துக் கொள்ளலாம்"- (www.jeyamohan.in) எனும் ஜெயமோகனின் கூற்று இங்கு முதன்மை பெறுகின்றது.

ஆக, எஸ்.பொ விற்கு ஏற்படுகிற அனுபவங்களும் அதனை அவர் பார்க்குற விதம், எதிற்கொள்கிற விதம், தீர்வு காண்கிறவிதம், விமர்சனங்கள், படைப்பாக்கச் சிந்தனை என்பன அவரை ஓர் பேராளுமையாக நமக்கு அறியச்செய்கிறது.

**துணைநூற்பட்டியல்**


1. அசோகமித்திரன் – படைப்புக்கலை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் - 629001, முதல் பதிப்பு – ஆகஸ்டு - 1987.
2. எம்.ஏ.நுக்மான் – சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் - 629001, முதல் பதிப்பு – டிசம்பர் - 2017.
3. எஸ்.பொ - வரலாற்றில் வாழ்தல், மித்ரா பதிப்பகம், சென்னை - 24, முதல் பதிப்பு, டிசம்பர் – 2003.
4. எஸ்.பொ - நற்போக்கு இலக்கியம், மித்ரா பதிப்பகம், சென்னை - 24, முதல் பதிப்பு, டிசம்பர் – 2013.
5. www.jeyamohan.in.